**16/8/2019**

**M.C.1/2019**

**PW1 நுரேசஷ்மி (எ) சகீனா பீபி**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.-**

எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணமானது பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும். 16.11.1997ம்தேதியன்று கரூரில் உள்ள ஜாமாத்தில் வைத்து எங்களது திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனது கணவர் கரூர் மாவட்டத்தில் உள்ள வேலாயுதம்பாளையத்தில் ரத்தப்பரிசோதனை லேப் வைத்திருந்தார். திருமணத்தின்போது எனது கணவருக்கு சொற்ப வருமானம் தான் கிடைத்தது. திருமணத்திற்கு பின்பு நானும், எனது கணவரும் வேலாயுதம்பாளையத்தில் 1 மாதம் தனிக்குடித்தனம் நடத்தினோம் அதன்பின்பு நானும், எனது கணவரும், கரூரில் உள்ள எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று அங்கு குடித்தனம் நடத்தி வந்தோம்.

(**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களை இந்த நீதிமன்றம் தானாக முன்வந்து சில கேள்விகள் கேட்டபோது இந்த வழக்கானது இவர்களுக்குள் சமரசமாக முடிவதற்கு வாய்ப்பு உள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த குறுக்கு விசாரணையானது இன்று பகுதியாக நிறுத்தி வைக்கப்படுகிறது**)